சிவோஹம் பாராயணத் தொகுப்பு
சிவார்ப்பண மஞ்சரி - 001

ஆதித்ய ஹ்ருதயம் எனும் செங்கதிர்த் துதி

அடியார்கள் அனைவரும் ஆதித்தனின் அருள்பெற அர்ப்பணிப்பு

சிவோஹம் சிவார்ப்பணம் தொகுதி - 2025 /01/17 தை வெள்ளி

ஆதித்ய ஹ்ருதயம்
செங்கதிர்த் துதி

மொழி பெயர்ப்பு : திருமதி. ஹா. கி. வாலம் அம்மையார்

சூரிய காயத்திரி

யார் நம் அறிவைத் தூண்டுகிருரோ, அந்தச்
சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத்
தியானிப்போமாக.

நவக்கிரக தோத்திரம்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி !
சூரியா ! போற்றி ! சுந்தரா ! போற்றி !
. வீரியா! போற்றி ! வினைகளைக் களைவாய்.

ஆரோக்யத்தை ஸூர்யபகவானிடமிருந்து அடையவேண்டும் என்னும் ப்ரமாணத்தை அனுஸரித்து உலகுக்கெல்லாம் ஒளியூட்டி நோய்களை நீக்கியருளும் கண்கண்டதெய்வமான ஸூர்யபகவானை ஆராதித்து நோயற்ற வாழ்க்கையையும் நீண்ட ஆயுளையும் பெற்று வாழ்வோமாக !

செங்கதிர்த் துதி

நிலைமண்டில ஆசிரியப்பா

பண்: புற நீர்மை பூபாளம் தாளம்: ஆதி

எதிரில் நிற்கும் இராவணன் தன்னைச்
சதுரன் இராமன் கண்டுசிந் திக்கச்
சமரில் களைத்துச் சியாமளன் நிற்க
அமரில் களைத்து ஐயனும் நிற்க 04

அமார்கள் குழுவுடன் அம்பரந் தன்னில்
அமல குணமுடை அகத்தியர் கண்டார்;
கமல முகமலர் கடுந்தவ முனிவர்
விமலனை விளித்து விளம்பல் மேவினார் 08

இரகுபதி இராமா ! என்சொல் கேளாய்
வெகுவிரை வினில்நீ அடைவாய் வெற்றி !
இரகசிய மறைஒன்று சொல்லச் கேளாய்
விரைவில் வெல்வாய் எதிரிகள் தம்மை 12

செங்கதிர் இதயம் செல்வம் தருவது
மங்களம் ஆனது மாண்பு நிறைந்தது
சங்கை ஒழிப்பது சமரில் ஜயிப்பது
எங்கும் சொலிப்பது இன்பம் அளிப்பது 16

துன்பம் துடைப்பது துயரம் அழிப்பது
அன்பு தழைப்பது ஆற்றல் அளிப்பது
பாவம் ஒழிப்பது பரகதி தருவது
நாவுக்கு இனியது நல்லன அருள்வது

கவலை அழிப்பது கடுந்துயர் தீர்ப்பது
தவப்பயன் ஆவது தண்ணளி பொழிவது
ஆயுள் அளிப்பது அவலம் அழிப்பது
நீயிதைக் கேட்பாய் நிச்சயம் வெல்வாய்,

கதிரவன் உதயன் கண்கவர் ஒளியன்
துதிசெயப் படுவோன் நூமணிக் கதிரோன்
ஒளிக்கதிர் மாலை உடையவன் இறைவன்
அளிநிற இராமா ! அவனைத் துதிப்பாய் !

அவனே எல்லாத் தேவரும் ஆவான்
அவன்பல மிகுந்தோன் அளவில் வலியோன்
அவன்சுரர் அசுரைக் காப்பான் கதிரால்
பிரமன் திருமால் பிஞ்ஞகன் அவனே

முருகன்ப்ர ஜாபதி இந்திரன் அவனே
காலனும் யமனும் சோமனும் அவனே
நீல நெடுங்க்கடல் அதிபதி அவனே
பித்ருகள் வசுக்கள் சாதியர் அசுவினிகள்

மருந்துகள் மநுக்கள் காற்றுவெங் கனலே
உயிரினத் அயிரே பருவம்செய் புனலே.
அலர்ஒளிக் கடலே ஆதித்தன் அவனே
யாவும் விளக்கும் ஸவிதா சூரியன் 40

மேவு விண்பதி கதிர்பதி சுடர்பதி
பசும்பொன் மேனியன் பானு திவாகரன்
பசும்பொன் கடலோன் பால்ஒளி வண்ணன்
பச்சைக் குதிரையன் ஆயிரம் கரத்தோன் 44

இச்சைகொள் ஏழு வண்ணக் குதிரையன்
ஒளிமய மேனியன் உறும்இருள் அழிப்போன்
ஒளிமயப் பரசிவன் துவஷ்டமார்த் தாண்டன்
கிரண மாலையன் கிளர்ஒளி வண்ணன் 48

இரணிய கர்ப்பன் இருங்குளிர் செய்வோன்
அக்கினிக் கருவோன் அதிதியின் புதல்வன்
சொக்கிடு சங்கன் சூழ்குளிர் அழிப்போன்
அண்ட வெளிக்கடற் கரசன் அரசன் 52

மண்டிடும் இருள்ஒழி மண்டலக் கதிரன்
ருக்யஜுர் ஸாம மறைக்கடல் கடந்தோன்
திக்கு மறைந்திடப் பொழிபெரு மழையே
மித்திரன் விந்திய மலைமுக டடைவோன் 56

அத்தனை அண்டமும் அரைநொடி கடப்போன்
எரிப்பவன் அழிப்பவன் சுடுபவன் அவனே
திருக்கிளர் பிங்களன் பொசுக்குமங் களனே
கவிமணி உலகுயிர் உக்ர ஒளியோன்

புவிமகிழ் செம்மணி பிறப்புக்கு இருப்பிடம்
விண்மின் சுடர்கள் நாள்கள் கோள்கள்
ஒண்சுடர் அனைத்துக்கும் உயர்பதி அவனே
ஒளிகளுக் கொளியே உம்பர்கள் பதியே

களிதரு கதிரவன் பன்னிரு பெயரோய் !
நளிர்குளிர் மழைகதிர் இடிமினல் புயலே
ஒளிஎனத் திகழ்ந்திடும் உனக்கு வணக்கம் !
உதய கிரிஎனும் கிழக்கே வணக்கம் !

அதுஅஸ்த மனமென் மேற்கே வருக !
சோதிப் பதியே சுடர்ஒளி வணக்கம் !
மாதிக் கினில்வளர் பகலவ வணக்கம் !
வெற்றிச் சுடரே விண்மணி வணக்கம் !

சுற்றிச் சுடர்படர் சூரிய வணக்கம் !
பச்சைக் குதிரைப் பதியே வணக்கம் |
மெச்சா யிரங்கதிர் விரிசுடர் வணக்கம் !
ஆதித்த அம்பர நவமணி வணக்கம் !

சோதிப் பரம்பர சுடர்மணி வணக்கம் !
உக்ரனே வீரனே உனக்கு வணக்கம் !
சக்கர சாரங்கக் கையனே வணக்கம் !
தாமரை மலர்த்தும் தனிச்சுடர் வணக்கம் ! 80

ஓம்எனும் பொருளே ஒண்சுடர் வணக்கம் !
மூன்றுமூர்த் திகளும் ஆனவ வணக்கம் !
தோன்றுசூ ரியனே சோதியே வணக்கம் !
விளங்குநல் ஒளியே வித்தக வணக்கம் ! 84

துலங்குமெய் ஒளியே தூயவ வணக்கம் !
எல்லாம் விழுங்கும் எரிஇறை வணக்கம் !
பொல்லாச் கொடுங்கடுங் கோலத்தாய் வணக்கம் !
இருளழி பனியழி இறைவா வணக்கம் ! 88

வரும்பெரு வைரியழி பரமா வணக்கம் !
ஒருவரும் ஒப்பிலி உயர்விலி வணக்கம் !
செருவினில் சுடர்வெற்றி வாகைய வணக்கம் !
செய்நன்றி அழிப்பவர் அழிப்பவ வணக்கம் ! 92

மெய்ஒன்று மேனிய விரிஒளி வணக்கம் !
சோதிப் பெருஞ்சுடர்ச் சூரிய வணக்கம் !
ஆதிப் பரஞ்சுடர் ஐயனே வணக்கம் !
உருக்கிய செம்பொற் கதிரவ வணக்கம் ! 96

தருக்கழி நெருப்பே தலைவா வணக்கம் !
உலகச் செயல்எலாம் உன்செயல் வணக்கம் !
விலக்குவை இருட்கடல் விறல்ஒளி வணக்கம் !
உலக சாட்சியே உனக்கு வணக்கம் ! 100

தலைவ ஞாயிறே இரவியே வணக்கம் !
அழிப்பான் காப்பான் அகில உயிரெலாம்
ஒழிப்பான் படைப்பான் உலகத் துயிரெலாம்
அருள்வான் மழையைப் பொழிவான் எரிப்பான் 104

இருள்,மருள் குளிர்,பனி இமையில் ஒழிப்பான்
அவன்தூங் கையிலே உலகுயிர் விழிக்கும்
அவன்கண் விழித்தால் அனைத்துயிர் அழியும்
அக்னி ஓம்பும் அரும்பயன் அவனே 108

திக்குகள் ஒளிரும் தீப்பயன் அவனே;
அருமறை நான்கும் வேள்வியும் அவனே
அரும்பெரு வேள்வியின் பயனும் அவனே
உலகச் செயல்எலாம் அவனே அவனே 112

நிலையா உலகில் நிலைப்பவன் அவனே
தொலையாப் பிறவிகள் தொலைப்பவன் அவனே
கலைகதிர்க் கடவுளாய் நிற்பவன் அவனே
ஆபத்து, விபத்தோடு அருந்துயர் இன்னல் 114

மேவிடு துக்கம், பயம்வழி தவறல்
ஆகிய நிலைகளில் அருக்கனை நினைந்தால்
போய்விடும் துயரம்; பொங்கிடும் நன்மை.
இராகவ நீயும் இரவியைப் பூசி

ஏகனே ! நீயும் இவன்கழல் நேசி
மும்முறை ஜபிப்பின் முயல்வாய் யுத்தம்
இம்முறை இராகவ ! வெல்வாய் சத்தியம் !
இராவணன் உயிரைக் குடிப்பாய் நொடியில்

இராமனே ! விஜயம் அடைவாய் படியில்
எனுமுரை கேட்டுக் குலமணி இராமன்
தினமணி இதயம் துதித்தான் நேரில்
உறதியும் ஊக்கமும் உத்தமன் கொண்டான்

கருதிச்செங் கதிர்அருள் காகுத்தன் நின்றான்
ஆதித்த இதயம் ஐயன் ஜபித்தான்
போதித்த அகத்தியன் பரித்தான் உள்ளம்
செங்கதிர் நோக்கி அங்கவன் நின்றான்

புங்கவன் துதிசெய்து புளகிதம் ஆனான்
மும்முறை முதல்வன் அங்கைநீர் குடித்துத்
தன்னுடைத் தனுவைத் தடக்கையால் எடுத்தான்
பத்துத் தலையனைப் பார்த்து மகிழ்ந்தான்

அத்தன் அவன்வதம் யத்தனம் புரிந்தான்

திருச்சிற்றம்பலம்

வஞ்சி விருத்தம்

கண்டான் இரவியும் ககனத்தில்
கொண்டான் மகிழ்ச்சி உள்ளத்தில்
கொண்டல் நிறத்தான் பூசிக்க
அண்டச் சூரியன் ஆசித்தான்.

இராவணன் உயிர்போ கும்வேளை
பராவுறு ஞாயிறு பண்புடனே
இராமா தாமதம் ஏன்? என்றான்
இராமனும் வென்றான் இராக்கதனை.

முற்றும்.

(வால்மீகி ராமாயணத்தில் - யுத்த காண்டத்தில்
நூற்று ஏழாவது சர்க்கம் ஆதித்ய ஹ்ருதயம்.)

திருச்சிற்றம்பலம்